# MSCF 2023

# பூஞ்சோலை

**Where your creativity is treasured!!**

முத்தமிழின் இயல் வடிவம்

Thank you

MSCF EC 2023



# தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்

சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்

தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்

தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே!

அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற

எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!

தமிழணங்கே!

உன் சீரிளமைத் திறம் வியந்து

செயல் மறந்து வாழ்த்துதுமே!

வாழ்த்துதுமே!

வாழ்த்துதுமே!

— 'மனோன்மணீயம்' பெ. சுந்தரம் பிள்ளை

# Table of Contents


| | |
|---|---|
| *Message From the Chairman* | 3 |
| *Message From the President* | 4 |
| *Greetings from your BoD 2023 Team* | 5 |
| *Greetings from your EC 2023 Team* | 6 |
| *Big Thank you to All our Sponsors for your support!!* | 7 |
| **ஆருயிர்கெல்லாம் அன்பு செய்தல் வேண்டும்** | 10 |
| **சீனி மிட்டாய்** | 12 |
| **மலரும் (நெளியும்) நினைவுகள்** | 15 |
| *Kids Corner* | 18 |
| **சூரியகாந்தி விதை நன்மைகள்** | 26 |
| **பாரம்பரிய உணவு செய்முறை** | 27 |
| **கருப்பு கவுனி அரிசி அல்வா** | 30 |
| *Riddles Corner* | 31 |
| *MSCF 2023 First Quarter and Second Quarter Events Summary* | 32 |
| *MSCF Digital Assets and Useful Links* | 34 |
| **நன்றி!!** | 35 |

# Message From the Chairman,
# MSCF Board of Directors 2023



Dear MSCF Members,

I hope this message finds you all in good health and high spirits. As the MSCF Board Chair, I wanted to take a moment to connect with each of you and share some important updates and thoughts regarding our ongoing commitment to serving our community.

First and foremost, I want to express my heartfelt gratitude to all of you for your dedication and enthusiasm towards our Sangam activities. Your time, effort, and passion have made a significant impact on the lives of those we serve, and it's truly inspiring to witness the positive change we bring about together.

2023 EC team took us all to the next level and celebrating all programs similar to milestone year. Thanks to Hemavathy and team for making it as an exceptional year.

Our Charity team introduced Golf tournament for fund raising and supporting the educational scholarship program. Would like to take this moment to thank the Charity team, all the donors and the members who extended hand to find the right deserving candidates, and the team who took care of the due diligence in identifying the right candidates. We are expecting to distribute the funds very soon.

BOE (board of election) sent the message for seeking 2024 EC and BOD nominations. Please nominate or get nominated to be part of the 2024 EC and BOD.

Our MSCF is constantly evolving, and so are the needs of the members we serve. If you have any ideas or suggestions for improvements to existing ones, please don't hesitate to reach out. Your input is invaluable.

Very respectfully,

Anandakumar Velayutham
Chairman, MSCF BoD 2023

# Message From the President, MSCF Executive Committee 2023



Respected MSCF Families,

On behalf of the entire MSCF EC 2023 Team, wanted to sincerely thank every one of you for your wonderful participation and enormous support in all our MSCF events and gatherings. Your presence and zeal for traditional festivities and commitment to give back to our community enable and inspire us in our combined mission of passing on our invaluable Tamil heritage and culture to our younger generations to come!

We are truly honored to be part of MSCF's massive journey of 37 years bringing numerous families together. It has not only strongly rooted over these years but also has significantly spread its branches touching upon various dimensions of people's lives – educational, entertainment, entrepreneurship etc. Thanks to everyone who has been instrumental in this journey, without your sincere efforts and contribution we wouldn't be where we are today!

While we are extremely proud of our growth, nevertheless we are presented with a novel set of challenges that comes along with it too! For example, our growing numbers should be substantially addressed with larger venues and accommodation in terms of food, supplies, reinforcements etc. within our defined scope.

Special mention and Thanks to my dynamic and dedicated team for working relentlessly behind the scenes and striving to give their best in addressing these challenges and supporting the ongoing needs. Thank you for all the feedback – both encouraging and constructive, that truly help us improve on our current processes and come up with new processes too.

We are extremely grateful to all our Sponsors, Donors, Volunteers, Patrons, Life Members and Annual Members for your incredible contribution and service, be it in the form of monetary support, time, effort or any as needed and that makes a huge difference! Big Thanks to our Board of Directors Team for always being a pillar of support and guidance.

As our theme for this year - 'Synergy' goes, we are stronger together! We have a lot of talents, intelligence, skills, competence, compassion, and goodness distributed among us. All that we have to do is acknowledge, appreciate, and align ourselves in one direction towards a common greater goal of well-being of everyone! We are happy to share this journey with you all and wish everyone good health, love, success, and happiness in all that you do!

Sincerely,
Hemavathy Raman
President, MSCF EC 2023

# Greetings from your BoD 2023 Team



Anandakumar Velayutham
Chairman



Vijay Shanmugam
Vice Chairman



Selvakumar Sathyanarayanan
Secretary



Ananth Vasudevan
Treasurer



Kamesh Gopalan
Charity and Social Service



Vijaisenthil Padmanabhan
ByLaw



Hemamalini Anand
Marketing and Membership



Thirumavalavan Murugaiyan
Education



Priya Rajan
Ombudsman

# Greetings from your EC 2023 Team



Hemavathy Raman
President



Viji Satish
Vice President



Elangovan Mohan
Secretary



Rajakumar Mariappan
Communication Coordinator




Bhaskaran Srinivasan
Treasurer



Kaushik Krishnamoorthy
EC Member



Nandhini Raju
EC Member



Ramesh Krishnan
EC Member



Rameshkumar Nagarajan
EC Member



Sairaman Govindarajan
EC Member



Soukath Ali Mohamed Ali
EC Member



Sureshkumar Balaraj
EC Member



Umamaheshwari Gopinath
EC Member



Vennila Kumaresan
EC Member




Vijay Selvaraj
EC Member

# Big Thank you to All our Sponsors for your support!!

**We humbly request all our MSCF Families to make use of the services they offer for your needs and support them.**

# OUR ANNUAL SPONSORS

*Thank You!*

## TITLE SPONSORS

PATEL BROTHERS





## PLATINUM SPONSORS







## GOLD SPONSORS






# OUR ANNUAL SPONSORS

*Thank You!*

## SILVER SPONSORS

**OMADE**
Market Place for Indian Chefs and Foodies
contact@omadefoods.com
wwww.OMADE.com

**BISOFT**
Product Development and Technology Staffing
Bala@bisoftllc.com
www.bisoftllc.com




## BRONZE SPONSORS













**Consultic**

**Mahendran Sathyananthan**
mahendran@theconsultic.com
https://www.theconsultic.com
248-924-0673
RevOps, Blockchain, Enterprise Architecture, Talent Services






# ஆருயிர்கெல்லாம் அன்பு செய்தல் வேண்டும்



By **சாய்ராமன் G**

மானுட வெற்றியின் அடிப்படை அன்பு. அன்பு உள்ளங்களை இணைக்கும் ஆற்றலுடையது. "அன்பே தெய்வம்" என்பது உலக உயிர் மொழி. அன்பு இயல்பாய் மலரும். அன்பு என்ற வெள்ளத்தை தடுத்து நிறுத்த முடியாது. தன் அன்புக்குரியவர் துன்பப்படுவதை நேரில் காணும் கண்கள் விடும் கண்ணீர், அவர் தம் அன்பை வெளிப்படுத்திவிடும். இதைத்தான் வள்ளுவர் -

*"அன்பிற்கும் உண்டோ அடைக்கும்தாழ் ஆர்வலர்*
*புண்கண்நீர் பூசல் தரும்"*

என்கிறார். மலை கைபிடியில் அகப்படுமா? ஆனால் "இறை" என்ற மலையும் "அன்பு" என்னும் கைப்பிடியில் அகப்படும்.

அன்பிருக்குமானால் அரசனும் விரும்பி குடிசையிலும் நுழைவான் இதைத்தான்

*"அன்பெனும் பிடியில் அகப்படும் மலையே*
*அன்பெனுங் குடில் புகும் அரசே"*

என்கிறார் வள்ளலார். "அன்பு-வறுமையிலும் பகிர்வு" மகிழ்ச்சிப்படுத்தும்.

ஒரு அரிய பொருளை காட்சிக்கு வையுங்கள், சிறந்த பொருளுக்கு பரிசு என்றான் நாட்டின் அரசன். ஒருவன் அழகான மயிலை வைத்தான், அப்படி ஒரு அழகு என வியந்தான் அரசன். ஆனால் பார்வையற்றவருக்கு? என கடந்தான் அரசன். குயிலை கூவவிட்டான் ஒருவன். ஆனால் காது கேட்காதவர்களுக்கு? என கடந்தான் அரசன். இனிப்பு கொண்டு வந்திருந்தான் ஒருவன். வியாதிக்காரர்களுக்கு? என கடந்தான் அரசன். அடுத்து "ஒரு களிமண் சிலை". வறுமை வாட்டிய ஒரு தாய் முகம் மலர்ந்தபடி ஒரு வறியவன் ஒருவனுக்கு அன்னமிடும் காட்சி. அரசர் பார்த்து மெய் மறந்தார். களிமண் சிலைக்கு பரிசு தரப்பட்டது. ஆம் அனைவரையும் ஆனந்தப்படுத்தும் அன்பு. உச்சக்கட்ட அன்பு வறுமையிலும் பகிர்வு. சீவகாருண்ய ஒழுக்கம். எவ்வுயிராயினும் இரங்குதல் வேண்டும். மானுடத்தையும் கடந்து, சகல சீவராசிகளிடமும் அன்பு கொள்ளுங்கள் என்கிறது தமிழ் அறம்.

வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன் என்கிறார் வள்ளலார், தாவி படற கொழு கொம்பில்லாமல் தவிக்கும் முல்லை கொடிக்கு தேரை கொடுத்தான் பாரி, குளிரில் நடுங்கிய மயிலுக்கு தன் போர்வையை கொடுத்தான் பேகன்.

அன்பினால் சாதிக்க முடியாதது இவ்வுலகில் ஏதுமில்லை. அனைவரிடமும் அன்பு கொள்ளுங்கள். "நினைந்து நினைந்து உருகி உருகி உற்றெழும் கண்ணீர் அதனால் நனைந்து நனைந்து" என்று வள்ளலார் பாடுகிறார்.

அப்பா நான் வேண்டுதல் கேட்டருள் புரிதல் வேண்டும் ஆருயிர்கெல்லாம் நான் அன்பு செய்தல் வேண்டும்.

நன்றி!!

# சீனி மிட்டாய்

**By சாருமதி பாஸ்கரன்**



அந்த மிகப் பெரிய அலுமினியப் பறவை, தன் சிறகுகளை விரித்துக் கொண்டு, சென்னை விமான நிலையத்தில் வந்து இறங்கியது. சோதனைச் சாவடிகளைக் கடந்து வெளியே வந்த விஸ்வாவிற்கு சுள்ளென்ற சென்னை வெயிலும் இதமான உப்புக் காற்றும் புதுத்தெம்பைக் கொடுத்தது. ஐந்து வருட இடைவெளியில் வெளிநாட்டிலிருந்து இந்தியாவுக்கு வந்திருக்கிறான் விஸ்வா.

அப்பா, அம்மா என குடும்ப உறவுகளுடன் ஒரு வார காலம் ஆசை தீர இருந்து விட்டு, பக்கத்து கிராமத்தில் வசிக்கும் தன் உயிர் நண்பனான ராகவனை பார்க்க மனம் நிறைய ஆசைகளை சுமந்து கொண்டு பை நிறைய வெளிநாட்டுப் பரிசுப் பொருட்களை எடுத்துக்கொண்டு கிளம்பியிருக்கிறான்.

விஸ்வாவும் ராகவனும் சிறு வயது முதல் இணை பிரியாத உயிர் நண்பர்கள். ஒருவருக்காக மற்றவர் உயிரைக் கொடுக்கக் கூட தயங்காதவர்கள். கல்லூரி முடித்து வெளிநாட்டுக்குச் சென்றான் விஸ்வா. சரியான வேலை ஏதும் கிடைக்காமல் விவசாயம் பார்த்து குடும்பம் நடத்தி வந்தான் ராகவன்.

ஆரம்ப காலத்தில் விஸ்வாவுடன் நன்றாகத் தான் பேசிக் கொண்டிருந்தான் ராகவன்.ஆனால் இந்த ஐந்து வருடங்களில் ராகவன் விஸ்வாவிடமிருந்து ஏனோ விலகி விலகியே போனான். காரணம் புரியாத விஸ்வா எவ்வளவோ முயற்சித்தும் முடியாமல் போக, மௌனமாக இருந்தவன் இதோ இப்போது நேரில் பார்த்துப் பேச கிளம்பி வந்திருக்கிறான். தான் வருவதை ராகவனுக்கு தெரியப்படுத்தி விட்டுத் தான் வருகிறான்.

கிராமம் நிறைய மாறியிருந்தது. பச்சை வெல்வெட் வயலும் பம்பு செட்டும் கரும்புக் கொல்லையும் மனதை நிறைத்தது, பச்சை வேர்க்கடலையும் பால் சோளக்கதிரும் பசியைக் கிளறியது. அவர்கள் படித்த பள்ளிக்கூடம் புது பெயிண்ட் வாசனையுடன் நின்று இருந்தது. அருகில் இருந்த பெட்டிக்கடையில் தான் “சீனி மிட்டாய்” கிடைக்கும்.

கையில் காசு இல்லாதது போல, ஒரே ஒரு சீனி மிட்டாயை வாங்கி, “காக்கா கடி” கடித்து இருவரும் சாப்பிடுவார்கள். அதில் ஏனோ ஒரு அலாதி சந்தோஷம் இருவருக்கும்.

மயிலிறகை புத்தகத்தில் வைத்து குட்டி போட்டதா என தினமும் பார்ப்பார்கள். இந்தப் பழையக் கதைகளைச் சொல்லி சிரித்துப் பேசி, நட்பை பலப்படுத்திக் கொள்ளத்தான் ஓடி வந்தான் விஸ்வா.

அந்த சின்னப்பெட்டிக் கடை கொஞ்சம் மாறியிருந்தது, கடைக்கரானுக்கு “சீனி மிட்டாய்” என்றால் என்னவென்று புரியவே இல்லை. கடையில் பாட்டிலில் இருந்த ஒன்றைச் சுட்டிக்காட்டி ஒரே ஒரு மிட்டாய் தரச் சொல்லிக் கேட்டவனை வினோதமாகப் பார்த்தான் அந்தக் கடைக்காரன்.

ராகவனின் பழைய ஓட்டு வீடு காரை பெயர்ந்து வெள்ளை அடிக்கப்படாமல் இருந்தது. வாசலில் சாக்கடையின் துர்நாற்றம். கதவு திறந்தே கிடந்தது. ராகவனின் மனைவியும் குழந்தைகளும் இவனது வருகையை விரும்பாவிட்டாலும் அவனது பரிசுப் பொருட்களால் வாயடைத்துப் போனார்கள்.

வீட்டின் உள்ளே வறுமை தெரிந்தது. ராகவன் ஓடி வந்து தன்னை இறுக்கிக் கட்டிக் கொள்வான். இந்த ஐந்து வருடப் பிரிவை அந்த ஒரு நிமிடமே தீர்த்து விடும் என்று மனக்கணக்கு போட்டுக் கொண்டு வந்த விஸ்வாவை. ராகவனின் “எதுக்கு இப்ப வந்திருக்கே ?” என்ற வார்த்தை நெஞ்சில் ஆணி போல இறங்கியது.

பேச்சற்று போய் சமாளித்தவனாய் “எப்படி இருக்கே ராகவா?” . “அப்பா, அம்மா எங்கே ?” என்றான் எதார்த்தமாக!

“அவங்கெல்லாம் டில்லியில அண்ணா வீட்டில சௌகரியமா இருக்காங்க. இப்போ என்ன இங்க பாழா போறதுன்னு வெளிநாட்டிலேயிருந்து வந்திருக்கே ?” என்ற ராகவன் வார்த்தையில் வெறுப்பு இருந்தது. “எனக்கு கொஞ்சம் வெளியில வேலையிருக்கு. நீ எப்போ கிளம்பறதா இருக்கே?” என்று ராகவன் பேசிய போது மனதில் நூல் அறுந்ததைப் போல இருந்தது விஸ்வாவுக்கு. எவ்வளவோ கனவுகளுடனும் ஆசைகளுடனும் ஓடி வந்தவனுக்கு ராகவனின் அலட்சியம் அதிர்ச்சியைத் தந்தது.

“இதோ கிளம்பிட்டேன் ராகவா, நீ உன் வேலையைப் பார்” என்ற விஸ்வா மனம் தாளாமல் தயங்கியவாறு “போறதுக்கு முன்னாடி ஒண்ணே ஒண்ணு மட்டும் .... ” என்று வார்த்தை வராமல் தவித்தான் விஸ்வா.

“இதோ பார்! சீனி மிட்டாய்! உனக்கு ஞாபகம் இருக்கா ? காக்கா கடி கடிச்சு சாப்பிடுவோமே ! இப்ப இதில பாதியைக் கடிச்சுத் தரியா?” என பரிதாபமாக நீட்டினான்.

“ப்ச் ! என்ன இதெல்லாம்? வயதாக ஆக விவேகம் வரனும். பழைய பஞ்சாங்கம் எல்லாம் இப்போ எதுக்கு ? நான் போகணும்” என்று கிளம்ப முயற்சித்த ராகவனிடம், “சரி நான் வரேன்பா”என்று சொல்லி அவசரமாக கிளம்பியவன் சீனி மிட்டாயை அங்கேயே விட்டு விட்டு புறப்பட்டான்.

மனம் கனத்து உடைந்து போய், பாதையை கண்ணீர் மறைத்து.

உள்ளே -

விஸ்வா கிளம்பிப் போவதை சன்னல் வழியாகப் பார்த்துக் கொண்டிருந்த ராகவன், முகத்தை மூடிக் கொண்டு கதறி கதறி அழுதான். "என் உயிர் நண்பனே! என்னை மன்னிச்சிடுடா ! " உன்னுடன் நட்புறவு பாராட்டி பேசத் தகுதியில்லாத பாவிடா நான். என் வீடு கடனில் இருக்கிறது. என்னைப் பெத்தவங்க அனாதை ஆசிரமத்தில் இருக்காங்க, குழந்தைகளெல்லாம் பால்வாடியில படிக்கிறாங்க. அடுத்த வேளை சாப்பாட்டுக்கே அலைபாயற குடும்பம். என்னோட வறுமை தான் உன்கிட்டே இருந்து என்னைப் பிரிச்சுது.

ஓரே ஒரு வார்த்தை உன் கிட்ட சொன்னால் போதும், எல்லாத்துக்கும் தோள் கொடுக்க நீ தயாராயிருப்பாய் என்று எனக்குத் தெரியும். ஆனால் அதையெல்லாம் சொல்லி என் காயத்துக்கு உன்னை மருந்தாக்கிக் கொள்ள நான் விரும்பவில்லை. என் வறுமைக்கு உன்னை வைத்து சாயம் பூசக்கூடாது. அது நம் தூய்மையான நட்புக்கு நான் செய்கிற துரோகம். உண்மை தெரிந்தால் நீ என்னை விட்டுக் கொடுக்க மாட்டாய், அதனால் தான் உன்னிடமிருந்து கொஞ்சம் கொஞ்சமாக என்னை விலக்கிக் கொண்டேன்.

"என்னிடம் உனக்கு உள்ள வெறுப்பு, என்னை மறக்க வைக்கும். இனி என்னைத் தேடி நீ வர மாட்டாய், என் வறுமை என்னோடு போகட்டும்" என்று சொல்லி கலங்கிய ராகவன், விஸ்வா விட்டுச் சென்ற அந்த சீனி மிட்டாயை ஆவலுடன் எடுத்து வாயில் போட்டுக் கொண்டான், மிட்டாயின் சுவையில் புனிதமாக நட்பு கலந்திருந்தது.

மேலே பரணில் இருந்த அந்த பழைய டிரங்க் பெட்டியை எடுத்து திறந்தான் ராகவன். உள்ளே இருந்த மங்கலான நோட்டுப் புத்தகத்தை கைகள் நடுங்க எடுத்துப் பிரித்தான். புத்தகத்தின் உள்ளே சின்ன வயதில் குட்டி போடும் என்று அவர்கள் வைத்திருந்த மயிலிறகு பத்திரமாய் இருந்தது.

# மலரும்(நெளியும்) நினைவுகள்

By Sindhu Babu



சற்று நேரம் ஓய்வு கிடைத்தால் கூட நம் மனம் கடந்த கால நினைவுகளால் ஆக்ரமித்து விடும். பல வருடங்களுக்கு முன் அது நடந்திருந்தாலும் சில நிகழ்வுகள் நம் மனதை விட்டு நீங்காமல் தங்கியிருக்கும். 20 வருடங்களுக்கு முன்னால் என் வாழ்வில் நடந்த நிகழ்ச்சி ஒன்றை உங்களிடம் பகிர்ந்து கொள்கிறேன்.

இது 2001 ஆம் வருடம் நடந்தது, இடம் Chicago, Illinois. நாங்கள் அமெரிக்கா வந்து நான்கு மாதங்கள் ஆகியிருக்கும். ஆறு மாதங்களாக கடும் பனியில் இருந்து சூரியன் மெதுவாக வரலாமா, வேண்டாமா என்று யோசித்துக் கொண்டிருந்த காலை பொழுது. கணவர் வேலைக்குத் தயாராகிக் கொண்டிருந்தார் , நான் வீட்டு வாசலுக்கு வந்தேன். பக்கத்து வீட்டில் உள்ள தம்பதிகள்(??) அவர்கள் வீட்டு புல் வெளியில் ஒரு சிறிய டார்ச் லைட் உதவியுடன் எதையோ தேடிக்கொண்டிருந்தனர். அது என்னவென்று தெரிந்துக் கொள்ள என் மனதில் ஒரு ஆவல். ஒரு வேளை அவரகள் திருமண மோதிரம் தொலைந்து விட்டதா? மெதுவாக நடந்து அவர்களிடம் பேசத் தொடங்கினேன்

நான் : Hi, Good Morning!

அவர்கள் - Good morning!

அவர்கள் - Where are you from?

நான் - We are from India. Are you searching for something?

அவர்கள்- We are searching for our pet snake Scoopy.

நான்(திகிலுடன்) : A snake?

அவர்கள் - Yes our baby, we are searching from this morning.

அவ்வளவு தான் ;எடுத்தேன் ஓட்டம் , மூச்சு வாங்க வீட்டுக்குள் ஓடி கணவரிடம் செய்தியை சொன்னேன். அவரோ மிகவும் அமைதியாக நீ கதவைப் பூட்டிக்கொண்டு உள்ளே இரு என்று அவர் அலுவலகத்துக்கு கிளம்பி விட்டார். தூங்கிக் கொண்டிருந்த என் மூன்று வயது பையனை

எழுப்பி பக்கத்து வீட்டில் snake missing என்று சொன்னேன். அவனோ தூக்கம் கலைந்து அழுதுக் கொண்டே மீண்டும் தூங்கி விட்டான்.



நம்ம ஊரில் ஆடு, மாடு, கோழி, நாய், முயல், கிளி இதெல்லாம் வளர்ப்பார்கள். இந்த ஊரில் பாம்பு வளர்க்கிறாங்க, அதுவும் நம்ம பக்கத்து வீட்டில் தானா இருக்கணும் என்று என் விதியை நொந்துக் கொண்டேன். எங்கள் ஊரில் பிரசித்திப் பெற்ற ( நாகர்கோவில்) நாகராஜா கோவிலில் - "சாமி நான் எதுவும் வேண்டுதல் குறை வைத்திருந்தால் மன்னித்து விடு , கண்டிப்பாக ஊருக்கு வந்தவுடன் நிறைவேற்றி விடுகிறேன் , என்னை காப்பாத்து என்று வேண்டிக் கொண்டேன்.

நேரம் ஆக ஆக மனதில் பயம் அதிகரிக்கத் தொடங்கியது. ஒரு நாற்காலியில் கால்களை சம்மணமிட்டு அமர்ந்துக் கொண்டேன். தெனாலி படத்தில் உள்ள கமலைப் போல என் நிலமை ஆகிவிட்டது என் நிலை - எழுந்திரிக்கப் பயம், நடக்க பயம், குளிக்க பயம் , எதை பார்த்தாலும் பயம் , பயம் மட்டும் தான். திடீரென்று ஒரு நடுக்கம், தொலைபேசியில் கணவரை அழைத்தேன் "பல்லு எடுத்திருப்பாங்களா மாட்டாங்களா? " என்றேன். அதற்கு அவர் "இப்ப மூணு வயசு தானே ஆகுது, பல்லு நல்லா தானே இருக்கு" என்றார். ஓ ,அவர் எங்கள் பையனுக்கு என்று நினைத்து விட்டார் போல. நான் " இல்லை , இல்லை அந்த பாம்புக்கு பல்லை எடுத்துருப்பாங்களா, மாட்டாங்களா? அவர் சில வினாடிகள் எதுவும் பேசவில்லை , பின்னர்

எனக்கு ஆபிசில் நிறைய வேலை இருக்கிறது, "உனக்கு வேலை எதுவும் இல்லைன்னா பேசாமல் படுத்து தூங்கு "என்று சொல்லி தொலைபேசியை துண்டித்து விட்டார்.

பக்கத்து வீட்டில் நிறைய பேர்களின் பேச்சுக்குரல் கேட்டுக்கொண்டே இருந்தது. வாசல் கதவில் இருந்த சிறிய இடைவெளியை அட்டையை வைத்து அடைத்தேன். பயம் இன்னும் தெளிந்த பாடில்லை, மின்விசிறியில் இருந்து பாம்பு இறங்கி வருவது போலவும் , தரையில் நெளிவது போலவும் தோன்றி வேதனையை அதிகரித்தது. எப்படி கண் அயர்ந்தேன் என்று தெரியவில்லை - நான் பார்த்த அத்தனை பாம்பு திரைபடங்களும் ( நீயா, ஆடு பாம்பே பாடல் இப்படி பல) கனவில் வந்துபோயின. திடீரென்று வெளியில் சத்தம் கேட்டு விழித்தேன். "Scoopy we found you!" அப்பாடா,ஒரு மில்லியன் டாலர் லாட்டிரியில் விழுந்தது போல ஒரே சந்தோஷம், துள்ளி எழுந்தேன்.

இது நடந்து பல ஆண்டுகள் ஆனாலும் கூட மனதில் நீங்காமல் தங்கிவிட்டது இந்த மலரும் (நெளியும்) நினைவுகள்!!

# Kids Corner

## Amazing Creations from our MSCF Kids




Picture collage of My Journey with MSCF

by Nivedha Srinivasan, showing her journey with MSCF from year 2011 to present.




**லெகோ துண்டுகள் வைத்து செய்த 'தமிழ்'**

by SreeHari Gopinath




Mother’s Day Art

By Keshav Rameshkrishnan



Sreehari Gopinath, Age -9



Sricharan Manikandan, Age - 5



Keshav, Age-7



Faithlyn Kanmani Selvam, Age-9



Sathvika Manikandan, Age-8



Riya, Age-9



Sarvesh, Age-11



Jane Marcella Inigo, Age-15



Xiao from the video game Genshin Impact


by Sharanya Vijayakumar, Age: 14


# சூரியகாந்தி விதை நன்மைகள்:

By Umamaheswari Gopinath



சூரியகாந்தி விதைகளில் உள்ள பாஸ்பரஸ் மற்றும் துத்தநாக சத்துக்கள் எலும்புகள் மற்றும் பற்கள் உருவாக பயன்படுகிறது. இந்த பாஸ்பரஸ் சத்து இதய தசைகளை சுருக்கவும், சிறுநீரக செயல்களை சீராக்கவும் பயன்படுகிறது. சூரியகாந்தி எண்ணெய்யில் உள்ள விட்டமின் ஈ இதயம், வாஸ்குலார், மூளை மற்றும் நரம்பு செயல்பாடுகளை ஒழுங்குபடுத்துகிறது. சாலட்கள் அல்லது இனிப்பு வகைகளில் மேலே தூவுவதன் மூலம் அல்லது ஸ்மூத்திஸ்களில் சேர்ப்பதன் மூலமும் அடிக்கடி சூரியகாந்தி விதைகளை நாம் சாப்பிடலாம்.






**Picture of Sunflower grown in my Garden**

# பாரம்பரிய உணவு செய்முறை

By Sapna Sowkath



வணக்கம் நண்பர்களே!

என் பெயர் சப்னா. இங்கு நான் இரண்டு தமிழ் பாரம்பரிய உணவுகளின் செய்முறை விளக்கத்தை கொடுத்துள்ளேன். நீங்களும் இதை செய்து பார்த்து சுவைத்து மகிழ வேண்டுகிறேன்.

1. **வாழையிலை அல்வா**
2. **கொய்யா இலை துவையல்**

## வாழையிலை அல்வா

**தேவையான பொருட்கள்:**



1. வாழையிலை பிளிந்த சாறு - 1 கப்
2. பிரவுன் சர்க்கரை - 1/2 கப்
3. கஸ்டர்ட் பவுடர் - 1/2 கப்
4. முந்திரி - தேவைக்கேற்ப
5. நெய் - 3 டேபிள் ஸ்பூன்
6. தண்ணீர் - தேவையான அளவு

**செய்முறை:**

வாழை இலையை நன்கு கழுவி, நடுவில் இருக்கும் தண்டை நீக்கிவிட்டு, இலைகளை சிறு சிறு துண்டுகளாக நறுக்கி, மிக்ஸி ஜாரில் போட்டு நன்கு அரைத்துச் சாறு எடுத்துக் கொள்ளவும்.

அடுப்பில் வாணலியை வைத்து அரை கப் பிரவுன் சுகர், முக்கால் கப் தண்ணீருடன் சேர்த்து நன்கு கிளறவும். சர்க்கரை முழுவதும் கரைந்து, ஒரு கொதி வந்தவுடன், (தனியாக ஒரு பாத்திரத்தில் 1/2 கப் கஸ்டர்ட் பவுடர், 1 கப் தண்ணீர் சேர்த்து , கட்டிகள் இல்லாமல் நன்கு கரைத்து எடுத்துக் கொள்ளவும்) கரைத்து வைத்ததை சர்க்கரை நீரில் சேர்த்து இதையும் கட்டிகள் இல்லாமல் நன்கு கரைத்துக் கொள்ள வேண்டும். இதனுடன் வாழை இலைச் சாறையும் சேர்த்து, கட்டிகள் இல்லாமல் கரைத்துக் கொள்ளவும். இக்கலவையை, ஒரு கடாயில் ஊற்றி, அடுப்பில் மிதமான தீயில் வைத்துக் கிளறவும். இதனுடன் முந்திரி மற்றும் 1 Tbs நெய்

விட்டு கிளறவும். பிறகு மறுபடியும் 1Tbs நெய் சேர்த்து கிளறி, திரும்பவும் 1Tbs நெய் சேர்த்து கிளறி அல்வா பதத்திற்கு வந்ததும் அடுப்பை அணைத்து விடவும் . ஒரு கண்ணாடி பாத்திரத்தில் சிறிது நெய் தடவி செய்து வைத்த அல்வாவை அதில் ஊற்றி, ஆற வைத்து, பின் ஒரு தட்டில் மாற்றி, நமது விருப்பத்திற்கேற்ப துண்டுகளாக நறுக்கி எடுத்துக் கொண்டால் சுவையான ஹெல்த்தியான வாழையிலை அல்வா ரெடி!

# கொய்யா இலை துவையல்



**தேவையான பொருட்கள்:**

1. கொய்யா இலை - 1 கப்
2. எண்ணெய் - தேவையான அளவு
3. சீரகம் 2 spoon
4. மிளகு 2 spoon
5. உளுந்து 2spoon
6. கடலை பருப்பு 2 spoon
7. முழு மல்லி 2 spoon
8. தக்காளி 1
9. பூண்டு 3 பல்
10. இஞ்சி சிறிய துண்டு
11. வரமிளகாய்-2
12. மல்லி தழை -தேவையான அளவு
13. கருவேப்பிலை -சிறிது
14. தேங்காய்-3துண்டு
15. உப்பு -தேவையான அளவு

**செய்முறை:**

முதலில் அடுப்பில் ஒரு கடாயை வைத்து 1 spoon எண்ணெய் ஊற்றி, உளுந்து, கடலைப்பருப்பு சேர்த்து நன்கு பொன்னிறமாக வறுத்து, தனியே எடுத்து வைத்துக் கொள்ளவும். பிறகு அதே கடாயை அடுப்பில் வைத்து மிளகு சீரகம் சேர்த்து வறுத்து வைத்துக்கொள்ளவும். பிறகு அதனுடன் வரமிளகாய் சேர்த்து வறுத்து, உளுந்து கடலை பருப்புடன் சேர்த்து எடுத்து வைத்துக்கொள்ளவும். பிறகு அதே வாணலியில் 3 spoon எண்ணெய் சேர்த்து புளியை போட்டு வறுத்து அதனுடன் பூண்டு இஞ்சி சேர்த்து வதக்கிக்கொள்ளவும். பிறகு அதனுடன் வெங்காயம் சேர்த்து நன்கு வதக்கவும். பிறகு தக்காளியை சேர்த்து வதக்கி, கருவேப்பிலை சேர்த்து தனியே எடுத்து வைத்துக்கொள்ளவும். பிறகு அதே கடாயில், 1 spoon எண்ணெய் சேர்த்து கொய்யா இலையை வதக்கவும். சிறிது நேரத்தில் கொய்யா இலை நிறம் மாறியதும் தனியே ஒரு பாத்திரத்தில் எடுத்து வைக்கவும். ஒரு மிக்சியில் கொய்யா இலை மற்றும் வறுத்து வைத்த

பொருட்கள் அனைத்தும் சேர்த்து, தேங்காய் மற்றும் வதக்கி வைத்த வெங்காயம் தக்காளி மல்லிதழை மற்றும் உப்பு சேர்த்து அரைத்து ஒரு பாத்திரத்தில் எடுத்து வைத்துக்கொள்ளவும்.

தாளிக்க:

ஒரு தாளிப்புக் கடாயில் 1spoon எண்ணெய் ஊற்றி காய்ந்ததும் கடுகு, உளுத்தம்பருப்பு , வரமிளகாய், கருவேப்பிலை சேர்த்து தாளித்து அரைத்து வைத்த கொய்யா இலை துவையலில் சேர்த்து கிளறினால் சுவையான கொய்யா இலை துவையல் தயார்.

# கருப்பு கவுனி அரிசி அல்வா

By Sindhu Babu



அல்வா என்றாலே எல்லாருக்கும் அலாதி பிரியம், ஆனா அதில போடுற நெய்யையும், சீனியையும் நினைச்சாலே எல்லாரும் பயப்படுறாங்க. ஆனா நான் சொல்லப்போற அல்வாக்கு நெய்யும் வேண்டாம் , சீனியம் வேண்டாம், என்னது! அல்வாக்கு நெய்யும் வேண்டாம், சீனியும் வேண்டாமா? அப்படி தானே கேக்குறீங்க? ஆமாங்க இது கருப்பு கவுனி அரிசி அல்வா. சீனிக்கு பதிலா இதில வெல்லம் சேர்க்கணும், நெய்க்கு பதிலா தேங்காய்ப்பால் சேர்க்கணும் . ரொம்ப ஆரோகியமான அல்வா; வாங்க எப்படி செய்யலாம்னு பார்க்கலாம்.

**<u>செய்முறை:</u>**

**<u>தேவையான பொருட்கள் ;</u>**

1. கருப்பு கவுனி அரிசி - 1 கப்
2. வெல்லம் - 1 கப் (பொடித்தது)
3. தேங்காய்ப்பால் - 1 கப் (மிகவும் கெட்டியான பால் )
4. தேங்காய் எண்ணெய் - 1/4 கப்
5. ஏலக்காய் பொடி - 1/2 tsp
6. முந்திரி பருப்பு - 1/4 கப் (உடைத்தது)



**<u>செய்முறை விளக்கம் :</u>**

ஒரு கப் கருப்பு கவுனி அரிசியை முதல் நாள் இரவே நன்கு கழுவி ஊற வைக்கவும். மறுநாள் காலை ஊறவைத்த அரிசியை நன்கு விழுதாக அரைக்கவும். தேங்காய்ப்பாலை நன்கு தண்ணீர் விட்டு கரைத்து அதில் பொடித்து வைத்த வெல்லத்தை கலந்து அடுப்பில் வைத்து கலக்கவும் . இதில் அரைத்த அரிசி மாவை கலந்து நன்கு கிளறி விடவும். தேங்காய் எண்ணெய்யை இடைஇடையே கலந்து கிளறி விடவும். நன்றாக சுருண்டு அல்வா பதம் வரும் வரை அடுப்பை மிதமான தீயில் வைத்து கிளறி விடவும். கலவை அனைத்தும் ஒன்றாக திரண்டு வந்தவுடன் ஏலக்காய் பொடியை கலக்கவும். முந்திரியை சிறிது தேங்காய் எண்ணெய் அல்லது நெய்யில் வறுத்து அல்வாவில் கலந்து கிளறி இறக்கவும். நெய் அல்லது எண்ணெய் தடவிய தட்டில் அல்வாவை கொட்டி ஆறியவுடன் துண்டு போடவும். சுவையான , ஆரோகியமான கருப்பு கவுனி அல்வா தயார்!

# Riddles Corner

## தமிழ் விடுகதைகள்

1. *என்னை உருவாக்க முடியும் ஆனால் உணர முடியாது. நான் யார்?*

2. *எனக்கு முகம் உண்டு கண்ல்லை, விரல்கள் உண்டு கையில்லை. நான் யார்?*

3. *நான் எதை வேண்டுமானாலும் சாப்பிடுவேன் ஆனால், தண்ணீர் குடித்தால் இறந்து விடுவேன். நான் யார்?*

4. *நான் சுத்தமாக இருக்கும்போது கருப்பாக இருப்பேன் அழுக்காக இருக்கும் போது வெள்ளையாக இருப்பேன். நான் யார்?*

5. *என்னிடம் அது இருந்தால் நான் அதை பகிர்ந்து கொள்ள மாட்டேன். பகிர்ந்தால் என்னிடம் அது இல்லை. அது என்ன?*

விடைகள் –

1. நிழல்
2. கடிகாரம்
3. நெருப்பு
4. கரும்பலகை
5. ரகசியம்

# MSCF 2023 First Quarter and Second Quarter Events Summary

## சிறிய கண்ணோட்டம்

(As published in '**அருவி**' Fetna Magazine)

மத்திய புளோரிடா முத்தமிழ்ச் சங்கமானது (MSCF) 1986 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு கடந்த 37 வருடமாக நமது பாரம்பரியம் மற்றும் கலாச்சாரத்தின் சிறப்பை நம் இளைய தலைமுறைக்கு எடுத்து செல்லும் வகையில் பொங்கல் திருநாள், தமிழ் வருடப் பிறப்பு, தீபாவளி, கிருத்து பிறந்தநாள், இரமலான் போன்ற விழாக்கள் மற்றும் கல்வி, விளையாட்டு சார்ந்த நிகழ்வுகளையும் வெகு சிறப்பாக நடத்தி வருகிறது.

தொடக்கமாக, இந்த வருடம் சனவரி 15 ஆம் நாள் தைத்திருநாளாம் பொங்கல் திருநாளை நமது கேசல்பரி திருக்கோயில் வளாகத்தில் பாரம்பரய முறைப்படி வாழைத் தோரணம், புது அடுப்பு, அழகிய நிழல் பந்தல், கரும்பும் மஞ்சள் கொத்தும் வைத்து சர்க்கரைப் பொங்கல் பொங்கி மகிழ்ந்தோம். பிறகு தமிழரின் பாரம்பரிய கிராமிய விளையாட்டுகளான உரியடி, சிலம்பம், குழந்தைகளின் தண்ணீர் குடமும் பூ பூத்ததும் போன்ற விளையாட்டுகள் நடந்தது. தொடர்ந்து உள் அரங்கத்தில் இசை நடனம் மற்றும் பிரபல நகைச்சுவை கலைஞர் திரு. படவா கோபி அவர்களின் நகைச்சுவை மற்றும் பலகுரலிசை நிகழ்ச்சி நடந்தது. தமிழ் பாரம்பரிய உணவோடு விழா இனிதே நிறைவு பெற்றது.

அடுத்ததாக, பிப்ரவரி 23, 2023 அன்று நமது முத்தமிழ்ச் சங்கத்தின் ஆண்கள் மற்றும் மகளிருக்கான மட்டைப் பந்தாட்டம், சைபரஸ் நிழற்சாலையில் அமைந்துள்ள பெரிய மைதானத்தில் சிறப்பாக நடந்தது. காலை 8.30 மணி தொடங்கி மாலை 6 மணி வரை பல பிரிவுகளில் பல குழுக்களுக்கான போட்டி நடந்தது. அன்று மாலையே தொடர் வெற்றி பெற்றோருக்கான பரிசு மற்றும் கோப்பைகள் பரிசாக வழங்கப்பட்டது, இப்போட்டியை கண்டுகளிக்க நமது மக்கள் குடும்பங்களாக அங்கு கூடியது, ஒரு சிறந்த பொழுதுபோக்காவும் மகிழ்ச்சியாகவும் அமைந்தது. அடுத்ததாக மகளிர் தினத்தையொட்டி மகளிரை ஊக்கவிக்கும் சிறப்பு நிகழ்ச்சிகளும், இணையம் வழி அறிவுச்சார்ந்த நிகழ்ச்சிகளும் நடக்க உள்ளன.

கடந்த காலாண்டில், மட்டைப்பந்தாட்டத்தை தொடர்ந்து, முகநூல் நேரலை(Facebook Live Q & A session) அமர்வு நிகழ்ச்சி மிகச் சிறப்பாக நடைபெற்றது. இதில் வழக்கறிஞர் திரு. இராமச்சந்திரன் பலராமன் (Ram Law Firm) அவர்கள் அமெரிக்க குடியேற்றம் தொடர்பான நமது உறுப்பினர்களின் சந்தேகங்கள் மற்றும் கேள்விகளுக்கு விளக்கம் அளித்தார். திரு விஜய் செந்தில் பத்பநாபன் (Seed IncubIT) அவர்கள் தொழில் முனைவு மற்றும் தொழில் சார்ந்த சந்தேகங்களுக்கும் தொழில் முனைவோர்க்கான வாய்ப்புகள் பற்றியும் விளக்கமளித்தார். தொடர்ந்து திரு. தேவ் பாலகிருஷ்ணன் (Certified Financial Group INC.) அவர்கள் நிதி மேலாண்மை பற்றிய விளக்கங்களும், நாம் நிதியை எப்படி கையாள வேண்டும் என்பது பற்றியும் விளக்கமளித்தார்.

அதனை தொடர்ந்து உலக மகளிர் தினத்தை போற்றும் வகையில் மகளிரை ஊக்குவிக்கும் மற்றும் தகவல் தரும் பயிரலங்கமாக( Women's Day Workshop) கல்வி, சமூக வளர்ச்சி, ஆளுமை, குழந்தை வளர்ப்பு, மூச்சுப்பயிற்சி மற்றும் மகளிர்க்கு பயன்படும் செய்திகளை அந்தந்த துறையை சார்ந்த மகளிரே வழங்கினர்.

அடுத்ததாக, இந்த ஆண்டு தமிழ்ப் புத்தாண்டோடு ரமலான் மற்றும் ஈஸ்டர் விழாக்களும் சேர்ந்து முப்பெரும் விழாவாக லேக் ஹோவெல் உயர்நிலைப் பள்ளி வளாகத்தில் மிகச் சிறப்பாக கொண்டாடப் பட்டது. இனிப்புகளோடும் இனிய வரவேற்போடும் விழா இனிதே தொடங்கியது. நமது கலாச்சாரத்தை பிரதிபலிக்கும் வகையில் நடனம், பாட்டு மற்றும் பல கலை நிகழ்ச்சிகளும் அதை தொடர்ந்து அரச பரம்பரை உடையில் ராஜா ராணிகளாக நம் செல்ல குழந்தைகளின் அணிவகுப்பு, அழகாகவும், நமது வரலாற்றை நினைவு கூர்வதுமாகவும் இருந்தது. தமிழ் வார்த்தைகளைக் கொண்ட பிங்கோ விளையாட்டு, பாட்டுக்குப் பாட்டு போன்ற விளையாட்டுகள் பெரியவர்கள் சிறுவர்கள் அனைவரையும் உற்சாகப்படுத்துவதாக இருந்தது. ஈஸ்டர் முட்டை வேட்டை குழந்தைகள் விளையாட, சிறப்பு இரவு உணவோடு விழா இனிதே முடிவடைந்தது. நமது மக்கள் குடும்பங்களாக அங்கு ஒன்று கூடியது அனைவருக்கும் உற்சாகத்தையும் மகிழ்ச்சியையும் அளித்தது.

அடுத்து, கோடை விடுமுறையைத் தொடர்ந்து நம் தமிழ் மக்கள் அனைவரையும் இணைக்கும் மேலும் பல சிறப்பு நிகழ்ச்சிகளையும், தீபாவளி கொண்டாட்டங்களையும் எதிர்நோக்கி பயணித்து கொண்டிருக்கின்றோம்.

# MSCF Digital Assets and Useful Links

| | |
|---|---|
| Website: | https://www.orlandotamilsangam.org |
| MSCF Studio Link: | https://www.orlandotamilsangam.org/MSCF-Studio |
| WhatsApp Link: | https://chat.whatsapp.com/JeghE6E3zZ72G7vk7eRBmd |
| Facebook Page: | https://www.facebook.com/orlandotamilsangam |
| YouTube Link: | https://www.youtube.com/@OrlandoTamilSangam |
| Instagram Link: | https://www.instagram.com/orlandotamilsangam/ |
| Email ID: | mscf.ec@gmail.com |

# நன்றி!!

# மீண்டும் சந்திப்போம்!!

## MSCF EC 2023

